**செ. கு. எண்:079** **நாள்: 07.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 7.6.2017

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், திரு ரவி என்பவரின் மகன் திரு. தனேந்திரன் என்பவர் 29.1.2016 அன்று மின் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், காயல்பட்டணம் தென்பாகம் கீழ லெட்சுமிபுரம் கிராமத்தில் 6.5.2017 அன்று கிணறு தோண்டும் போது, விஷ வாயு தாக்கியதில் திரு. ஜெபஸ்தியான் மற்றும் திரு. சண்முகசுந்தரம் ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், புதுகழுவாச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு கந்தசாமி என்பவரின் மகன் திரு குமரேசன் என்பவர் 10.5.2017 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், இரும்பேடு கிராமம், மெய்யூர் ரோட்டில் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மண் சரிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், கீழாந்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராகவன் என்பவரின் மகன் திரு. பூபாலன் என்பவர் 16.5.2017 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, வாகனம் மின்மாற்றியில் மோதியதில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த பேருந்து நடத்துனராக பணியாற்றிய திரு. தௌலத்ஷா என்பவர் 17.5.2017 அன்று அரசுப் பேருந்திலிருந்திலிருந்து தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், விநாயகன்தெரு கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதையன் என்பவரின் மனைவி திருமதி ராஜேஸ்வரி மற்றும் அவருடைய மகள் செல்வி ஹாசினி மற்றும் மகன் செல்வன் மாதவன் ஆகிய மூன்று பேரும் 24.5.2017 அன்று கொள்ளிடம் ஆற்றில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. தனேந்திரன், திரு. செபஸ்தியான், திரு. சண்முகசுந்தரம், திரு. குமரேசன், திரு. பூபாலன், திரு தௌலத்ஷா, திருமதி ராஜேஸ்வரி செல்வி ஹாசினி மற்றும் செல்வன் மாதவன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 9 நபர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**